வாசிக்க: எண்ணாகமம் 22:7-18

***“அவன் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும்... என் ஆண்டவரின் கட்டளையை நான் மீறக்கூடாது” (எண் 22:18)***

இறைவனது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்குக் கீழ்ப்படிதல் ஒரு நிபந்தனையென்பது உண்மைதான். ஆனால் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்ற பிரதான நோக்கமல்ல நம்மைக் கீழ்ப்படியச் செய்வது. இன்றையச் சுகபோகச் சுவிசேஷச் செய்தியின் அடிப்படைத் தவறுகளில் ஒன்று இதுதான். கடவுளைப் பிரியப்படுத்தவேண்டுமென்பதே நமது கீழ்ப்படிதலின் புனித நோக்கமாயிருக்க வேண்டும். நான் ஆசீர்வதிக்கப்படலாம்; ஆசீர்வதிக்கப்படாமலும் போகலாம்; ஆனால் “உன் கடவுளாகிய ஆண்டவர் நானே” (யாத் 20:2ஆ) என்று சொன்னவர் நமது கீழ்ப்படிதலைப் பார்த்து ஆனந்தமடையவேண்டும்.

கீழ்ப்படிதலைக் கற்க நாம் அடிக்கடி ஆபிரகாமிடமே திரும்புகிறோம். ஊர் என்ற நகரில் சொகுசாய் வாழ்ந்து வந்தவனவன். ஆனால் அவனுக்கோ நிரந்தரமாய் ஓரிடத்தில் வசிப்பதின் வசதிகளைவிட நாடோடியாய்க் கடவுளுக்குக் கீழ்ப்படிதலே முக்கியமாய்த் தெரிந்தது. நெடுங்காலமாய்க் காத்திருந்து பெற்ற ஆசீர்வாதமாகிய ஈசாக்கைவிட ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதே அவனுக்குச் சிறந்ததாய்த் தெரிந்ததால்தான் ஈசாக்கைப் பலிகொடுக்கத் தயங்காது புறப்பட்டுச் சென்றான் (எபி 11:8,9,17,18).

மண், பூண், பெண், இதுபோன்ற ஆசீர்வாதங்களைத் தருவது ஆண்டவரே. ஆனால் அவரது மிஷனரி அழைப்பிற்கு நாம் கீழ்ப்படிய இவைகளே தடைகளாய் மாறும்போது அவர் எவ்வளவாய் ஏமாற்றமடைகிறார்! (லூக் 14:18-20). மிஷனரிப் பணிக்கு அழைக்கப்பட்ட பலரது சாக்குப்போக்குகளும் இவைகளில் ஒன்றுதான். ஆசீர்வாதங்களைவிட ஆசீர்வதிப்பவர்தானே முக்கியம்? கீழ்ப்படியாமைக்குச் சிலரது விளக்கம்: “இந்த ஆசீர்வாதங்களைக் கொண்டு நான் திருப்பணிக்கு உதவுவேன்.” நம்முடையதையல்ல, நம்மையே கடவுள் முதலாவது கேட்கிறார்!

நாம் கடவுளுக்குக் கீழ்ப்படியாவிட்டாலும் அவர் தமது இரக்கத்தினால் தொடர்ந்து நம்மை ஆசீர்வதிக்கலாம். ஆனால் கடவுளது ஆசீர்வாதங்கள் நமது வழிகளை ஆமோதிப்பவைகள் என்று எண்ணிவிடக்கூடாது.

கீழ்ப்படிதலால் வரும் நன்மைகளுக்கும், கீழ்ப்படியா நிலையிலும் கிடைக்கும் நலன்களுக்கும் வேறுபாடு உண்டு. அரசுக்குக் கீழ்ப்படியாது வரித்துறையை ஏமாற்றினால் சேமிப்பு கூடும். இவ்விதம் பதுக்கிய பணத்திலிருந்து கொடுக்கப்படும் காணிக்கைகளும் தசமபாகங்களும் கடவுளுக்கு அருவருப்பானவை (ரோ 13:1-7). கொஞ்சம் ஒத்துப்போய்விட்டால்—லஞ்சம் கொடுத்தால், ஒரு பொய் எழுதிவிட்டால் —இலாபம் நமதே. ஆனால் பாலாக் அரசன் திரளான வெகுமதிகளை வாக்குப்பண்ணியபோது பிலேயாம் மறுத்துச் சொன்ன பதில் என்றும் நம்முன் இருக்கவேண்டும் (எண் 22:18).

*நில்! தர்க்கித்தது போதும்;*
*கவனி! ஆண்டவர் பேசுகிறார்;*
*செல்! அவரது தோட்டத்திற்கு!*